Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நிதி: 33 பாலம்: 07 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் APRIL 01, 2023

# அமெரிக்க அதிபரின் கனடிய வருகை

"எனது பார்வையில் அமெரிக்கர்களும் கனடியரும் இரண்டு பேர், இரண்டு நாடுகள், ஒரே இதயத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர். இவ்வுறவு தனிப்பட்ட தொடர்பு, நட்பு, குடும்பம், வணிகம் மற்றும் கலாசாரம் எனத் தொடர்கிறது. பூமியில் எந்த இரண்டு நாடுகளும் இத்தகைய நெருங்கிய உறவுகளால் பிணைக்கப்படவில்லை. எங்கள் தொழிற் சங்கங்கள் எல்லைகளைக் கடந்து ஒன்றாக இயங்குகின்றன. அதேபோல் எங்களது விளையாட்டுக் குழுக்களும் எல்லைகளைக் கடந்து இயங்குகின்றன" என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (Joe Biden) கனடிய நாடாளுமன்றத்தில் 2023 மார்ச் 24இல் உரையாற்றுகையில் கூறினார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின்னர் முதற் தடவை கனடாவிற்கான இரண்டு நாள் பிரயாணத்தை மேற் கொண்டு தனது மனைவி ஜில் பைடன் (Jill Biden) சகிதம் 2023 மார்ச் 23இல் கனடாவுக்கு வந்திருந்தார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அதிபர் பதவி ஏற்ற பின்னர் பிரயாணம் செய்யும் 18ஆவது நாடாகக் கனடா வருகிறது. கனடிய நாடாளுமன்ற சபையில் உரையாற்றும் ஒன்பதாவது அமெரிக்க அதிபராக ஜோ பைடன் இருந்தார்.

பிரெஞ்ச் மொழியில் கனடியருக்கு வணக்கத்தைத் தெரிவித்துத் தனது உரையை ஆரம்பித்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நாற்பது நிமிடங்கள் உரையாற்றினார். நூற்றிற்கு மேற்பட்ட கனடிய நாடாளுமன்ற உறுப்பினர், மேற்சபை உறுப்பினர், உயரதிகாரிகள், இராஜதந்திரிகள், முதற்குடி மக்களின் தலைவர்கள், கனடாவின் முன்னாள் பிரதமர்கள், கனடிய ஆளுநர் மற்றும் பல தொழில் அதிபர்கள் நிறைந்திருந்த நாடாளுமன்ற அவையில் அவர் உரையாற்றியிருந்தார்.



President Joe Biden and Canadian Prime Minister Justin Trudeau
Thanks: AP Photo: Andrew Harnik

ஜோ பைடன் அவரது உரையில் கனடாவை ஒரு நம்பகமான கூட்டாளி (reliable ally) மற்றும் ஒரு நிலையான நண்பன் (steady friend) எனக் குறிப்பிட்டு, நீங்கள் எப்போதும் அமெரிக்காவை உங்கள் உதவிக்கு எதிர்பார்க்கலாம். எங்களது குறிக்கோள் பின்னிப் பிணைந்தவை மற்றும் பிரிக்க முடியாதவை. ஏனெனில் இது நாங்கள் தெரிவுசெய்து கொண்டவிதம் அப்படி என்று கூறும்போது பலர் அவரது உரைக்கு எழுந்து நின்று பாராட்டுதல் தெரிவித்தனர்.

கனடிய நாடாளுமன்றத்திற்கு, அமெரிக்க அதிபர் வந்தபொழுது அவரை வரவேற்ற வர்களில் எதிர்க்கட்சித் தலைவரும் பழமை வாதக் கட்சியின் தலைவருமான Pierre Poilievre, பசுமைக்கட்சித் தலைவர் எலிசபெத் மே ஆகியோரும் இருந்தனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும் கனடிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற முன்னர் 30 நிமிடங்கள் தனிப்பட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

அமெரிக்க அதிபரின் கனடியப் பயணத்தின் முன்னரே இரண்டு நாட்டு அரசுகளின் உயர் அதிகாரிகளும் அதிகார பூர்வமான விடயங்கள் பலவற்றைக் கலந்துரையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது உரையாடல்களில் கனடாவில் இருந்து பிரதமர் அலுவலக உயர்மட்டப் பணியாட்கள், பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் Jody Thomas, கனடாவின் துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான Chrystia Freeland மற்றும் வெளியுறவு அமைச்சர் Melanie Jolyயும் கலந்து கொண்டனர்.

இவ்வுரையாடல்களில் அமெரிக்க அதிபர் சார்பில், வெளியுறவுத்துறை செயலாளர் Antony Blinken, எரிசக்தி செயலாளர் Jennifer Granholm, அமெரிக்க அதிபரின் தேசிய பாதுகாப்பு விவகாரங் களுக்கான உதவியாளர் Jake Sullivan, உள்நாட்டுப் பாதுகாப்பு ஆலோசகர் Lig Sherwood-Randall மற்றும் அமெரிக்க அதிபரின் ஊடகச் செயலாளர் Karine Jean-Pierreஉம் கலந்து கொண்டனர்.

கனடிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருடனும் தனிப்பட்ட முறையில் அமெரிக்க அதிபர் சிறிது நேரம் கலந் துரையாடினார். எதிர்க்கட்சித் தலைவர் Pierre Poilievre ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "தாங்கள்

தொடர்ச்சி 07 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannenhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

Selling/Leasing/Listing
www.vanyhome.ca/
Life Insurance & Super VISA
www.vjsfinancial.com
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc.




For All Your Private Mortgage Needs

8T Capital

Mortgage Administration # 13073



AYNGKARAN SIVA
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



JUTHIS KUPER
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

*Available 7 days a week*



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுமா?

**- விகிர்தன் -**

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து முதல் தவணை கடன் தொகையை பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. நீண்ட கால கலந்துரையாடல்கள், இழுபறிகளுக்கு மத்தியில் இந்த வாய்ப்பு அரசாங்கத்திற்குக் கிட்டியுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் நிதியமைச்சரும், நாட்டின் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதல் தவணை கடந்த 23ஆம் திகதி நிதி அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். 333 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஊடகப் பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் நிதியமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீடிக்கப்பட்ட கடன் வசதியை அங்கீகரித்துள்ள நிலையில், முதல் தவணை கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதனை மிகப்பெரிய வெற்றியாக அரசாங்கத் தரப்பினர் கொண்டாடுகின்றனர். ஒரு தனிமனிதன் கூட கடன் பெறுவது தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியாது. ஏனெனில் அந்தக் கடனை மீளளிப்பதென்பது பாரிய பொறுப்பும் சுமையுமான பணி. அக்கடனை அடைக்கும் வரையில் மகிழ்ச்சியடைய முடியாது.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களில் இப்போது, முதல் தவணையாக 333 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. மிகுதி தொகையை பெறுவதற்கு இன்னமும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை நிறைவேற்றிக்காட்ட வேண்டியும் உள்ளது.



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை உடனடியாக நிறைவேற்றாவிட்டால் இரண்டாவது கடன் தவணையை பெற்றுக் கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி நாட்டை இன்னும் பெரிய கடன் சுமைக்குள் தள்ளும் என்றும், இவ்வாறான கடனை பெற்றுக்கொள்வது தொடர்பில் பெருமையடையாது வெட்கப்பட வேண்டும் என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ், இலங்கையின் வேலைத் திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. இந் நிலையில், சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல தரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியுதவியை இலங்கை பெற இத்திட்டம் உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் குறிப்பாக 2020ஆம் ஆண்டில் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்ட நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறு ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வலியுறுத்திய போதும் கோட்டாபயவோ பொதுஜன பெரமுனவினரோ அதனை கருத்தில் எடுக்கவில்லை.

காலம் கடந்து, ஓர் ஆட்சிமாற்றத்தின் பின் தற்போது அது நடந்தேறியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், கடன் நிலைத் தன்மையை அடையவும் முயற்சித்து வரும் இலங்கைக்கு ஒரு வரலாற்று மைல்கல்லாக அமைகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

சர்வதேச நாணய நிதியத்திற்கு அமைவாக இலங்கைக்கு பரிஸ் கழகம், சீனா, இந்தியா உள்ளிட்ட அதன் உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்களின் நிதி உத்தரவாதம் கிடைத்துள்ளமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும். எது எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் மிக நேர்த்தியானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான பொருளாதார திட்டம் ஒன்றை உருவாக்கி அதனை சரியான திசையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொருளாதாரம் நிலைத்து நீடிக்க வேண்டுமானால் நாட்டில் வாழும் இன, மத நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப் படல் வேண்டும். இவ்விரண்டு முக்கிய விடயங்களையும் நடைமுறைப்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தியும் நிலைத்து நிற்கப் போவதில்லை.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்ட உடன்பாடுகள்-முன்வைத்துள்ள நிபந்தனைகள் தொடர்பில் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிபந்தனையையும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு விதிக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறான நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் முன்வைக்குமா என்பது தெரியவில்லை.

இலங்கையின் அரசியல் விவகாரங்களில் சர்வதேச நாணய நிதியம் தலையிடாது என தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் அண்மையில் இவ்வாறான கருத்தை வெளியிட்டிருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் மனித உரிமைகளுக்கு முக்கியத்துவமளிக்குமானால் நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை வலியுத்துவது அவசியமானது. இதற்கான அழுத்தங்களை தமிழர் தரப்பு கொடுக்க வேண்டும்.

## மத்திய...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்கனவே வெளிநாட்டவர்களால் வாங்கத் தடை செய்யப்பட்டிருந்த ஆதனக் கொள்வனவில் சிறிய மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. அதாவது வெளிநாட்டில் இருக்கும் முதலீட்டாளர்கள் புதிய ஆதன செயற்திட்டங்களை (Projects) கொண்டு வருவதற்காக நிலங்களை வாங்கலாம். இதனால் முதலீட்டாளர்கள் இதில் முதலிடலாம். இந்த ஆண்டில் 30%மான ஆதன புதிய வீடு/மனை செயற் திட்டங்கள் (Projects) இரத்து செய்யப்பட்டு விட்டன.

இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் நிச்சயமாக ஆதனப் பற்றாக்குறையை (பாதிப்பை) ஏற்படுத்தும். எதிர்பாராத அளவிற்கு 2022இல் 1 மில்லியன் புதியவர் கள் கனடாவுக்கு வந்துள்ளனர். இவர்கள் தங்குவதற்கு ஆதனம் தேவை. எவ்வாறு இந்நிலைமைகள் கையாளப்படும்?

## நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அலந்தார்க்கு - துன்பப்பட்டவர்க்கு துன்பப்படுவோருக்கு ஈதலும், வறுமையான காலத்திலும் ஒழுக்கத்தோடு இருத்தலும், நட்பு செய்தவரைப் பெருகச் செய்தலும் முதன்மையான அறங்களாகும்.

இவ்வாறாக இனியவை நாற்பது, திரிகடுகம் ஆகிய நீதி நூல்களில் பல பாடல்களில் நட்பு பற்றிய அறிவுரைகளைக் காணலாம். நீதி நூல்கள் பலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளை ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)




விளம்பரம் VLAMBARAM

33ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் மீதான தாக்குதல் ஒரு மதத்திற்கு எதிரான தாக்குதல் மட்டுமல்ல!




வவுனியா- நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்த பழமை வாய்ந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவம் இலங்கையில் இன, மத வெறி இன்னமும் உயிர்ப்பான நிலையில் இருந்து வருவதை உறுதிப் படுத்தியுள்ளது. இனங்கள், மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் என்பது இந்த நாட்டில் சாத்தியமில்லை என்பதையும் இவ்வாறான சம்பவங்கள் நிரூபித்து வருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் படைத்தரப்பின ரால் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம்பெற்று வருகின்றன. கடந்த மூன்று வருடங்களாக வவுனியா மாவட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்குப் பக்தர்கள் செல்வதையும், திருவிழாக்கள் நடத்து வதையும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இங்கு திருவிழா செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையை நீதிமன்ற உத்தரவு வழங்கியிருந்தது. இந்த நிலையில் கடத்த சில தினங்களுக்கு முன்னர் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருக்கும் அனைத்து விக்கிரகங்களும் உடைத்து நாசம் செய்யப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கையானது படைத் தரப்பினராலேயே இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பௌத்த சிங்கள இனவாதிகள் படைத் தரப்பினதும், தொல்பொருள் திணைக் களத்தினதும் உதவியுடன் வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி, அதில் பௌத்த தளம் அமைப்பதை குறிக் கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அதனை விகாரையாக்கு வதற்காக அவர்கள் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேல் முயற்சி செய்து வருகின்றனர்.

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒலுமடு- பால மோட்டை கிராமத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலையின் உச்சியில் அமைந்துள்ளது. கிமு 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான இந்த மலை பல வரலாற்று சிறப்புகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

300 மீட்டர் உயரமான வெடுக்குநாறிமலை அடிவராத்தில் கேணி, தமிழ் பிராமிய கல்வெட்டுக்கள் என்பன அதன் வரலாற்றைக் கூறுகின்றது.



இம்மலையின் உச்சியில் ஆதி லிங்கேஸ்வரர் என்ற சிவனுடைய லிங்கம் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஐந்து தலைமுறையினருக்கு மேலாக இப்பிரதேச மக்கள் இந்த ஆலயத்தை வழிபட்டு வருகின்றனர்.

இந்த வரலாற்றை இல்லாமல் செய்வதே பௌத்த இனவாதத்தின் திட்டமிட்ட நடவடிக்கையாக உள்ளது. வடக்கு-கிழக்கில் இருக்கும் தமிழர்களின் மத, கலாசார, தொல்லியல் அடையாளங்களை அழித்து அனைத்தையும் பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. தொல்பொருள் திணைக்களம் இதற்கு பிரதானமாக துணை நிற்கின்றது.

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வர ஆலயம் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டமைக்கு எதிராக தற்போது ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 30ஆம் திகதி வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. தமிழரசுக் கட்சி இந்த ஆர்ப்பாட்ட நிகழ்விற்கு அழைப்பு விடுத்திருந்தது. கட்சி சார்பிற்கு அப்பால் இந்த ஆர்ப்பட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் மட்டுமன்றி, தமிழ் பிரதேசங் களில் அமைந்துள்ள பழமை வாய்ந்த தமிழர் வழிபாட்டுத் தளங்களையும் சின்னாபின்னப்படுத்தும் திட்டமிடப்பட்ட செயற்பாடு தீவிரப்பட்டுள்ளதாகவே தெரிகின்றது.

பலாலியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பழமை வாய்ந்த இராஜராஜேஸ் வரி அம்மன் ஆலயத்தின் விக்கிரகங்கள் சூறையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த விக்கிரகங்கள் இரண்டினை காணவில்லை என ஆலய பரிபாலன சபைத் தலைவர் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு ஒன்றினைப் பதிவு செய்துள்ளார். அத்துடன், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவிலும் விக்கிரங்கள் காணாமல் போயுள்ளமை சம்மந்தமாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1846ஆம் ஆண்டு பலாலி அம்மன் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அங்கே ஒவ்வொரு கடவுளர்களின் விக்கிரகங் களும் வைக்கப்பட்டிருந்தன. அன்றைய காலம் தொடக்கம் உச்சவ காலங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. பின்னர், 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி அக்கிராமத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கிராம மக்கள் வெளியேறி யாழ். குடா நாட்டில் உள்ள பல பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இக்காலத்தில் 2002ஆம் ஆண்டு இந்து கலாச்சார அமைச்சராக இருந்த மகேஸ்வரனாலும் கிராம மக்களின் முயற்சியினாலும் இந்த ஆலயத்திற்கு சென்று வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு மே மாதம் மட்டும் இந்த ஆலயத்திற்கு சென்று வந்தபோதும் நல்ல நிலையிலே ஆலயம் இருந்தது. ஆலய விக்கிரகங்களும் இருந்தன. 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி மீண்டும் இந்த ஆலயத்துக்கு சென்ற போதும் விக்கிரகங்கள் எல்லாம் நல்ல நிலையிலே இருந்ததன.

தற்போதுவரை இந்த ஆலயத்திற்கு விசேட தினங்களுக்கு சென்றுவந்து கொண்டிருப்பதாகவும், அப்படி இருக்கின்றபோது இப்பொழுது 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி திருவெம்பாவை தினத்திற்கு சென்ற பொழுது முருகன் சிலை காணாமல் போயிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் மிகப்பெரும் இராணுவத் தளமாக இருக்கின்ற பலாலி இராணுவ தளத்தின் உயர் பாதுகாப்பு நிலையத்தில் அமைந்துள்ள குறித்த ஆலயத்தின் விக்கிரகங்கள் இராணுவத்தினருக்குத் தெரியாமல் எவ்வாறு காணாமல் போயுள்ளன என நிர்வாகத் தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

24 மணி நேரமும் ஆலயத்தை சூழ உள்ள பகுதிகளிலும் பாதுகாப்புக் கடமையில் இராணுவம் ஈடுபட்டிருக்கின்ற போது, பூஜை வழிபாடுகளுக்குச் செல்வ தற்குக்கூட இராணுவத்தின் அனுமதி யினை பெற்றுச்செல்கின்ற நிலைமை இருக்கின்றபோது குறித்த விக்கிரகங்கள்



படிப்படியாகக் காணாமல் போனமைக்கான பிரதான காரணம் என்ன? என்பது கேள்வி யாகவுள்ளது என ஆலய பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பிரதேசங்களிலுள்ள தொல்லியல் வரலாறுகளை இல்லாமல் செய்வதற்காக தமிழ் மக்களின் தொன்மையான வழி பாட்டுத்தளங்கள் மீது மேற்கொள்ளப்படு கின்ற தாக்குதல்கள் வெறும் இந்து மதம் மீதான தாக்குதல் என்று கருதக் கூடாது. இது தமிழினத்தின் மீதான தாக்கு தலாகவே கருத வேண்டும்.

எனவே தமிழ மக்கள் மதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து இந்த திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு எதிராகப் போராட வேண்டும்.

**Sam Surendran**
Mortgage Broker
LICENCE # M16002312
**647-922-5704**
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

**MORTGAGE OFFICE**
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 628

# மத்திய அரசின் நிதி அறிக்கை – 2023



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஜஸ்ரின் ரூடோவின் தலைமையிலான லிபரல் அரசின் 2023/2024 நிதி அறிக்கை (BUDGET) செவ்வாய் மார்ச் 28, 2023, அன்று நிதி அமைச்சரினால் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பொருளாதார சுருக்கத்தை எதிர்பார்த்து இருக்கும் இன்றைய காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட 'நிதி அறிக்கை' என்றபடியால் எதிர்பாராத வரிச்சுமைகள் அரசினால், சாதாரண கனடியர்கள் மீது சுமத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக சாதாரண கனடியர்களுக்கு சில சலுகைகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அதிக பணம் உழைப்பவர்களிற்கும், நிதி நிறுவனங்களிற்கும் மேலதிக வரி கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக வருடம் 1 மில்லியனிற்கு மேலாக உழைக்கும் எட்டாயிரம் (8,000) கனடியர்களுக்கு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த (2022) நிதி அறிக்கையில் வெளிநாட்டவர்கள் டிசம்பர் 2025வரை வீடு/மனை கனடாவில் வாங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் வெளி நாட்டவர்கள் புதிய வீடு/மனை/வியாபாரத் தளங்கள் அமைக்கக்கூடிய செயல் திட்டத்திற்காக (Development Projects) நிலங்கள் வாங்கலாம் என திருத்தப் பட்டுள்ளது. இதனால் வெளிநாட்டவர்கள் புதிய செயற்திட்டம் (Project) செய்யப் படக்கூடிய நிலங்களில் மேலதிக முதலீட்டை எதிர்பார்க்கலாம்.

கனடாவில் ஒரு பொருளாதார சுருக்கம் (Recession) ஏற்படுமா? இதனைப்பற்றிய தகவல்கள் பலவிதமாக வருகின்றன. கனடாவில் ஏற்கனவே பொருளாதார சுருக்கம் ஏற்பட்டுள்ளது அல்லது ஏற்படலாம் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கனடிய ஆதன விலை 12% கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது குறைந்துள்ளது. எனினும் மேலும் இறக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. இதனை தடுப்பதற்கு சிறந்த வழிமுறை வட்டி வீதத்தைக் குறைத்தலே அல்லது கனடியர் ஆதனத்தை வாங்கு வதற்கு அல்லது ஏற்கனவே வாங்கியவர் களிற்குத் தகுந்த அரச உதவி செய்வதே.

அதிகரிப்பு பொருளாதாரத்தைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. பொதுவாக வட்டிவீதத்தின் அதிகரிப்பு என்பது, வட்டி அதிகரிப்பில் இருந்து ஏறக்குறைய ஒரு வருடத்திலிருந்து ஒன்றரை வருட காலத்திலேயே அதன் முற்றான தாக்கம் தெரியவரும். ஆரம்ப வட்டி அதிகரிப்பு இப்பொழுதிலிருந்து ஒரு வருடத்தைத் தாண்டிவிட்டது. (முதலாவது அதிகரிப்பு மார்ச் 02, 2022) ஏற்படுத்தப் பட்டது. அதன் தாக்கம் தெரிய வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

கனடாவில் பணவீக்கத்தின் (Inflation)



பணவீக்கம் சாதாரண நிலைக்குத் திரும்புவதுபோல உள்ளது. இதனாலேயே மார்ச் 02, 2023இல் கூடிய மத்திய வங்கியின் ஆளுனர் குழு வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இது கனடியர்களிற்கு சிறிது நிம்மதியைக் கொடுத்துள்ளது. இதிலிருந்து தெரிய வருவது தொடர்ச்சியான வட்டிவீத அதிகரிப்பால் ஏற்படுத்திய வட்டி வீத அதிகரிப்பு பொருளாதாரத்தை இறங்கச் செய்தது. இதனை நிவர்த்தி செய்வதற்குப் பல முறைகளைத் தெரிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஓர் அங்கமாக 2023இன் நிதி அறிக்கையில்

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)



# அமெரிக்க...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதுகாப்பு,அமெரிக்க உற்பத்திகளை மட்டும் வாங்கும் "Buy American" திட்டத்தில் கனடாவிற்கான விதிவிலக்கு மற்றும் கோவிட்-19 தடுப்பூசி பற்றிய அரசின் ஆணை (Mandates) பற்றி விவாதித்தோம். அதிபர் ஜோ பைடன் இவற்றை மிகவும் அவதானமாகக் கேட்டார். அவர் கனடாவிற்கு ஒரு நல்ல நண்பனாகவும், ஒரு நல்ல அயலவராகவும் இருக்க விரும்புகிறார். இவ்வாறான அவரது செய்கையால் நான் மிகவும் ஊக்குவிக்கப்பட்டேன்" என்றார்.

பசுமைக் கட்சித் தலைவர் எலிசபெத் மேயும் அமெரிக்க அதிபருக்கு நோவா ஸ்கோசியா மாகாணத்தில் சொக்கலேற்


Joe Biden holds a chocolate bar he received from Green Party Leader Elizabeth May

(Chocolate) தொழிற்சாலை வைத்திருக்கும் சிரியா நாட்டின் அகதியின் தொழிற்சாலையில் செய்யப்பட்ட "Peace by chocolate" என எழுதப்பட்ட சொக்கலேற் ஒன்றை வழங்கினார்.

அமெரிக்க அதிபருக்கும் அவரின் மனைவிக்கும் அவர்களுடன் கனடா வந்திருந்த குழுவினருக்கும் வெள்ளிக் கிழமை மாலை கனடியப் பிரதமரும் அவரின் மனைவியும் ஒரு பெரிய விருந்துபசாரத்தை ஒட்டாவாவில் உள்ள கனடிய விமான மற்றும் விண்வெளி அருங்காட்சியகத்தில் (Canadian aviation and space museum) நடத்தினர். இந்த விருந்துபசார வைபவத்தில் 350 விருந்தினர் கலந்து கொண்டனர்.

விருந்தை ஆரம்பித்து வைத்துக் கனடியப் பிரதமர் ஆற்றிய சிற்றுரையில், இந்த விண்வெளி அருங்காட்சியகம், இவ்விருந்து நடத்த மிகவும் பொருத்தமான இடம் என்றார். சந்திரமண்டலத்திற்கான அடுத்த அமெரிக்காவின் Artemis II விண்வெளிப் பயணத்தில் இரண்டு அமெரிக்கர்களுடன் ஒரு கனடியரும் பயணிக்க இருக்கின்றார் என்று கூறினார்.

அத்துடன் பிரதமர் அவ்விருந்தில் பங்கு பற்றும் சிலரது திறமைகள், மொழி மற்றும் உணவு வகைகளில் கனடாவின் பன்முகத்தன்மை பற்றியும் தனது சிற்றுரையில் கூறினார்.

கனடியப் பிரதமர், அவரின் மனைவி மற்றும் அவர்களின் மூன்று பிள்ளைகள் அமெரிக்க அதிபருக்கும் அவரின்


President Joe Biden, Jill Biden, Prime Minister Justin Trudeau and Sophie Gregoire Trudeau at Rideau Cottage

மனைவிக்கும் அவர்களது பயணத்தின் முதல் நாளான வியாழக்கிழமை இரவு விருந்தை அவர்களது Rideau Cottage இல்லத்தில் வழங்கினர். தனது இரண்டு நாள் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க அதிபர், அவரது மனைவி மற்றும் அவரது பயணக்குழுவினர் சகிதம் மார்ச் 24 இரவு அமெரிக்கா திரும்பினர்.

அமெரிக்க அதிபரின் இப்பிரயாணத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் சில.

* தற்போது கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே அகதிகள் மற்றும் சட்டபூர்வமற்ற முறையில் வருபவர்களைக் கட்டுப்படுத்த "Safe Third Country Agreement" நடைமுறையில் உள்ளது. இதன்படி கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான சட்டபூர்வமான எல்லைகளினூடாக வருவோர் அவர்கள் மூன்றாவது பாதுகாப்பான நாட்டினூடாக வந்தால் அங்கு திருப்பி அனுப்பப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர். ஆனால் இந்த விதி கனடாவிற்கும் அமெரிக்காவிற்குமான சட்டபூர்வமான எல்லையில் உள்ள அலுவலகங்களுக்கு ஊடாக வராமல் வேறு குறுக்குப் பாதைகளூடாக எல்லை கடந்து வருபவர்


Jill Biden, President Joe Biden, Canadian Prime Minister Justin Trudeau and Sophie Gregoire Trudeau at the Canadian Aviation and Space Museum

களுக்கு அமல்படுத்தப்படமாட்டாது. இது கனடிய லிபரல் அரசிற்கு மிகவும் பெரிய பிரச்சினையாக இருந்தது. இவ்வாறு குவிபெக் மாகாணத்தில் உள்ள ஒரு குறுக்குப் பாதையான Roxham Road ஊடாக மட்டுமே 40,000பேர் கடந்த ஆண்டு குவிபெக் மாகாணத்திற்குள் வந்த அகதி கோரியிருந்தனர். அவர்களை வேறு ஒரு நாட்டுக்கும் திருப்பி அனுப்ப முடியாமல் கனடாவில் விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதை ஒரு மிகப்பெரிய பிரச்சினையாகக் குவிபெக் மாகாண முதல்வர் Francois Legault பிரதமரிடம் முறையிட்டிருந்தார். அத்துடன் இவ்வாறு அகதிகளைக் கனடாவில் அனுமதித்து முறையாக விண்ணப்பம் செய்துவரும் குடிவரவாளர்களின் அனுமதியை தாமதப்படுத்துவது லிபரல் அரசின் இயலாமையை எடுத்துக்காட்டுவதாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பலமுறை குரல் எழுப்பியிருந்தார். இந்த விடயத்திற்கு அமெரிக்க அதிபரின் இப்பிரயாணத்தின்போது தீர்வு காணப்பட்டது. இதன்மூலம் தற்போது நடைமுறையில் உள்ள "Safe Third Country Agreement" கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே யார் எந்த எல்லையைத் தாண்டிவந்தாலும் அமல்படுத்தப்படும். இதன்மூலம் Roxham Road போன்ற குறுக்கு வழியில் எல்லை தாண்ட முயல்வோரும் அவர்கள் மூன்றாவது பாதுகாப்பான நாட்டினூடாக வந்தால் அங்கு திருப்பி அனுப்பப்பட்டு அகதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவர். இதற்குப் பதிலாக மேற்கு அரைக் கோளத்தில் உள்ள நாடுகளான Haiti, Colombia மற்றும் Ecuador போன்ற நாடுகளில் இருந்து அடுத்த வருடத்தில் 15,000 பேரை சட்டபூர்வமான குடிவரவாளர்களாகக் கனடா ஏற்றுக்கொள்ளும்.

* Haitiஇல் நடைபெறும் உள்நாட்டுக் கலவரங்களை அடக்க, கனடா முன்னின்று செயல்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வந்தது. கனடா தனது இராணுவத்தை Haitiஇற்கு அனுப்பி அங்குள்ள அரசிற்கு உதவுவதையே அமெரிக்காவும், Haitiஉம் விரும்புகின்றன. ஆனால், கனடியப் பிரதமர் இராணுவத் தளபாட உதவிகள்


U.S. President Joe Biden, First Lady Jill Biden, Prime Minister Justin Trudeau and Sophie Gregoire Trudeau at the Parliament. Thanks Andrew Harnik/AP Photo

மற்றும் இராணுவ ஆலோசகர் உதவிகள் எனப் பலவற்றை செய்து வந்தாலும், கனடிய இராணுவத்தை Haiti அரசிற்கு உதவுவதற்கு அனுப்ப சம்மதிக்கவில்லை. அமெரிக்க அதிபரின் பயணத்தின்போது கனடியப் பிரதமர் Haitiஇற்கு மேலதிக $100 மில்லியன் இராணுவத் தளபாட உதவிகளை வழங்க முன்வந்தார். அமெரிக்க அதிபர் கனடாவின் இராணுவத்தை Haitiஇற்கு அனுப்பி வைக்க வலியுறுத்தவில்லை.

* கனடா NORAD எனப்படும் வட அமரிக்க விண்வெளி பாதுகாப்பு தலைமையகத்திற்கு $7.3 பில்லியனை முதலிட முன்வந்துள்ளது.

* உலகின் மிகப்பெரிய தண்ணீர் ஆதாரங்களான ஐந்து பெரிய ஏரிகளைப் பாதுகாக்க இரு நாடுகளும் முன் வந்துள்ளன. இதற்குக் கனடா $420 மில்லியனை இதற்கு முதலிடுகிறது.

# சாதனையின் உச்சம்

அறிவே; ஆகாயமே; மென்மையே;
மன உறுதி தளம்பாத இமயமே;
நீ
நினைத்திருந்தால்;!

கடல் மழை காற்று நெருப்பு
எழுச்சிகளிலும் மேலான
வீரியம் மிக்கதொரு
போர் வீரர்களைத் திரட்டி
வாள்வீசி வேலெறிந்து அம்பு எய்து
தீயோரின்
தசை எலும்பு நரம்புகளை உரமாக்கி
நன்செய் புன்செய் பெரு வெளிகளை
வளம் கொண்ட பயன்தரு நிலங்களாக்கி
இருக்கலாம்.

உரம்கொண்ட உன் உடலில்
ஆணிகளை அறையத் தயாராகும் அந்த
இறுதிக் கணத்திலாவது
தோளிற் காவிச்சென்ற
சிலுவைக்கட்டையால்
எதிரிகளை அடித்து நொருக்கித்
துவந்தயுத்தம் செய்து;
நீதியான ஆட்சியை நிலைநாட்டி
இருக்கலாம்.

ஆனால்;




விண்ணில் சுழன்று பயணிக்கின்ற இந்தப்
பூகோளக்கல்லில்
உனது இரத்த உளியால்
'பொறுமை'
எனும் மூன்றெழுத்து அழியாதவாறு
நீ பொழிந்து வைத்து வரலாறு படைத்துச்
சென்றாய்.

மனித நேயத்தில் சம நோக்கில்
கருணையில் நீதி நியாயத்தில்
இரக்கத்தில்
இன்னும் முழுமைபெறாத
மனித இனத்தைப் பார்த்து,
பிரபஞ்சம் கண்ணீர் விடுகின்றது;



முத்துராஜா

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

# நானிலம் போற்றும் நட்பு - 18



- அகணி -
authorakani@gmail.com

"உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு" (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 798) என்ற குறளிற்கு "ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமல் இருக்க வேண்டும், அதுபோல் துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"உள்ளம் சிறுமை அடைவதற்குக் காரணமானவற்றை நினைக்கக் கூடாது. துன்பம் வரும்போது கைவிட்டுச் செல்பவர் நட்பைக் கொள்ளக் கூடாது" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"ஊக்கம் குன்றும் செயலைச் செய்யக் கூடாது. ஆபத்தில் உதவாதவர் நட்பைக் கொள்ளக் கூடாது" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

எமது ஊக்கம் குறைவதற்குக் காரணமான வற்றை நினைக்கக் கூடாது. என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

அறிவில்லாதவர்களுடன் கொண்ட நட்பினை விட்டு விலகுவதால் நமக்கு நன்மையே ஏற்படும் என்று கூறி அறிவில்லாதவர்களுடன் உள்ள நட்பு கூடாது என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது.

கடந்த இதழில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இனியவை நாற்பது என்ற நூலில் உள்ள சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களையும் ஆராய்ந்தோம். இனியவை நாற்பது பாடல்களில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களையும் கவனிப்போம்.

இனியவை நாற்பது _ பாடல் 19
"நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே
பட்டாங்கு பேணிப் பணிந்து ஒழுகல் முன் இனிதே
முட்டு இல் பெரும் பொருள் ஆக்கியக்கால் மற்றுஅது
தக்குழி ஈதல் இனிது."

நட்பு கொண்டவர்களைப் பற்றி புறம் கூறாமல் இருத்தல் இனியது. சத்தியத்தை பேணிப் பாதுகாத்து வாழ்தல் மிக இனியது. பெரும் பொருளைத் தேடி அதனைத் தக்கவர்களுக்கு ஈதல் மிக இனிது.

இனியவை நாற்பது _ பாடல் 25
"ஐ வாய் வேட்கை அவா அடக்கல் முன் இனிதே
கைவாய்ப் பொருள் பெறினும், கல்லார்கண் தீர்வு இனிதே
நில்லாத காட்சி நிறை இல் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது."

ஐந்து வழியால் வருகின்ற ஆசைகளை அடக்குதல் இனிது. கையில் நிற்கக்கூடிய பொருளைப் பெறுவதாக இருந்தாலும் கல்லாதவரை விடுதல் இனிது. இந்த உலகம் நிலையானது என்போரின் நட்பினைக் கை விடுதல் இனியது.




இனியவை நாற்பது _ பாடல் 34
"எல்லிப் பொழுது வழங்காமை முன் இனிதே.
சொல்லுங்கால் சோர்வு இன்றிச் சொல்லுதல் மாண்பு இனிதே.
புல்லிக் கொளினும் பொருள் அல்லார் தம் கேண்மை
கொள்ளா விடுதல் இனிது."

இரவில் செல்லாமல் இருப்பது இனியது. சொல்லும் இடத்து மறதியின்று சொல்லுதல் இனிதாகும். தானாக வலிய வந்து நட்புக் கொள்ளும் கயவர்களின் நட்பினைக் கைவிடுதல் இனிதாகும்.

பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'திரிகடுகம்' என்ற நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களை கவனிப்போம். இதனை இயற்றியவர் நல்லாதனார் அவர்கள். உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம்.

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருளைக் குறிக்கும். மூன்று மருந்துப் பண்டங்களால் ஆகிய திரிகடுகம் என்னும் மருந்து உடல் நலம் பேணுவதைப் போன்று, இந்நூற் செய்யுட்களில் மும்மூன்றாக உரைக்கப் பெற்ற அறங்களும் உயிர் நலம் பேணுவனவாம். இதனாலேயே இந்நூல் திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று செய்திகளை ஒரு பொதுக் கருத்தோடு இணைத்துக் கூறும் முறை உள்ளது.

திரிகடுகம் - பாடல் 1
"அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய
தொல் குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்
அரில் அகற்றும் கேள்வியார் நட்பும், - இம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து."

அரில் - குற்றம்
அருந்ததி போன்று கற்புடைய பெண்ணின் தோளும், நல்ல குடியில் தோன்றிய பெருமை உடையவரது நட்பும், சொற்களினிடத்தே குற்றங்களை அகற்றும் கேள்வி உடையவரது நட்பும் இம்மூன்றும் திருகடுகம் போன்று சிறந்ததாம்.

திரிகடுகம் - பாடல் 3
"கல்லார்க்கு இன்னா ஒழுகலும், காழ்க் கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும், இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும், - இம் மூன்றும்
அறியாமையான் வரும் கேடு."

கற்றறியாதவருடன் நட்பாய் இருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், சிற்றறிவினரை தம் வீட்டுள் சேர்ப்பதும் அறியாமையினால் விளைகின்ற கேடுகளாகும்.

திரிகடுகம் - பாடல் 4
"பகை முன்னர் வாழ்க்கை செயலும், தொகை நின்ற
பெற்றத்துள் கோல் இன்றிச் சேறலும், முன் தன்னைக்
காய்வானைக் கை வாங்கிக் கோடலும், - இம் மூன்றும்
சாவ உறுவான் தொழில்."

சேறல் - செல்லுதல், பெற்றம் - மாடு
பகைவருக்கு முன்னே தன் செல்வத்தைக் காட்டுவதும், மாட்டு மந்தையில் கோல் இல்லாமல் செல்வதும், பகைவரோடு நட்பு பாராட்டுவதும் கெடுதியை உண்டாக்கும்.

திரிகடுகம் - பாடல் 9
"பெருமை உடையார் இனத்தின் அகறல்,
உரிமை இல் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,
விழுமிய அல்ல துணிதல், - இம் மூன்றும்
முழு மக்கள் காதலவை."
அகறல் - நீங்குதல்

பெருந்தன்மை உடையாரிடம் நட்பு கொள்ளாதிருத்தலும், தமக்கு உரிமை இல்லாத பெண்களை விரும்புதலும், சிறந்தவை அல்லாதவற்றைச் செய்வதும் அறிவற்ற மூடர்கள் விரும்பிச் செய்வதாம்.

திரிகடுகம் - பாடல் 14
"இழுக்கல் இயல்பிற்று, இளமை, பழித்தவை
சொல்லுதல் வற்றாகும், பேதைமை, யாண்டும்
செறுவோடு நிற்கும், சிறுமை, - இம் மூன்றும்
குறுகார், அறிவுடையார்."

இழுக்கல் - வழுவுதல்,
செறுவோடு - சினத்தோடு
இளமையில் தவறு செய்வது இயல்பு என்றாலும் தவறாகும். அறிவுடையோரால் விலக்கப்பட்டதைச் சொல்லுதல் அறியாமை. எப்போதும் சினத்தோடு நிற்றல் ஈனத்தன்மையாகும். இவற்றைக் கொண்டவரிடம் அறிவுடையார் நட்பு கொள்ளமாட்டார்.

திரிகடுகம் - பாடல் 15
"பொய் வழங்கி வாழும் பொறியறையும், கை திரிந்து
தாழ்விடத்து நேர் கருதும் தட்டையும், ஊழினால்
ஒட்டி வினை நலம் பார்ப்பானும், - இம் மூவர்
நட்கப் படாஅதவர்."

தட்டை - மூங்கில், ஊழ் - முறை
பொய் பேசி வாழும் செல்வந்தன், தனக்கு மேலானவன் தாழ்ந்தபோது போற்றாதவன், விதியால் நண்பன் துன்பப்படும்போது பயனை எதிர் பார்ப்பவன், இம்மூவரும் யாராலும் நட்பு கொள்ளத் தகாதவராவார்.

திரிகடுகம் - பாடல் 18
"ஒருதலையான் வந்துறூஉம் மூப்பும், புணர்ந்தார்க்கு
இரு தலையும் இன்னாப் பிரிவும், உருவினை
உள் உருக்கித் தின்னும் பெரும் பிணியும், - இம் மூன்றும்
கள்வரின் அஞ்சப்படும்."

இரு தலையும் - இரண்டிடத்தும், உரு - உடம்பு
"உறுதியாக வரும் மூப்பு, நண்பரின் பிரிவு, உடம்பினை உருக்குகின்ற தீராத நோய், இம்மூன்றுக்கும் அஞ்சி எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

திரிகடுகம் - பாடல் 37
"குறளையுள் நட்பு அளவு தோன்றும் உறல் இனிய
சால் பினில் தோன்றும், குடிமையும் பால் போலும்
தூய்மையுள் தோன்றும் பிரமாணம் - இம் மூன்றும்
வாய்மை உடையார் வழக்கு." 37

குறளை - கோட்சொல், சால்பு - நிறைவு
பொருள் சுருக்கத்தினால் நட்பின் எல்லை தோன்றும். இனிய செயல்களினால் குடிப் பிறப்பின் தன்மை தோன்றும். மனத் தூய்மையினால் வாழ்வின் அளவு தோன்றும். எனவே இம்மூன்றும் உண்மை யான பெரியோரின் குணங்களாகும்.

திரிகடுகம் - பாடல் 41
"அலந்தார்க்கு ஒன்று ஈந்த புகழும், துளங்கினும்
தன் குடிமை குன்றாத் தகைமையும், அன்பு ஒடி
நாள் நாளும் நட்டார்ப் பெருக்கலும், - இம் மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை."

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)

# ‘நண்பகல் நேரத்து மயக்கம்’ படம் எதைப் பேசுகிறது?

## நேர்காணல்: மண்குதிரை ஜெயக்குமார் நேர்கண்டவர்: கண்ணன்

மலையாளத்தின் முன்னணி நடிகர் மம்முட்டி நடிப்பில், முன்னணி இயக்குநர் இயக்கத்தில் மலையாளம், தமிழ் இரண்டும் கலந்த இருமொழிப் படமாக வெளியாகி வியாபார ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் வெற்றிபெற்றுள்ளது ‘நண்பகல் நேரத்து மயக்கம்’. இந்த படத்தில் திரைக்கதை, திரைப்படம் உருவாக்கத்தில் பங்கெடுத்ததுடன் தமிழ் பகுதிக்கான வசனங்களையும் எழுதியுள்ளவர் எழுத்தாளர், கவிஞர், பத்திரிகையாளர் மண்குதிரை ஜெயக்குமார். ‘தமிழ் இந்து திசை’ நாளிதழில் உதவியாசியராகப் பணிபுரியும் ஜெயக்குமாரை சென்னையில் ‘விளம்பரம்’ இதழுக்காக சந்தித்தோம்.

**‘நண்பகல் நேரத்து மயக்கம்’ படத்திற்குள் நீங்கள் வந்த கதையை சுருக்கமாக சொல்ல முடியுமா?**

நான் பணியாற்றும் பத்திரிகைக்காக இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி ஒரு முறை நேர்காணல் செய்தேன். அதுமுதல் அவருடன் பழக்கம் ஏற்பட்டது. நான் மலையாளப் படங்கள் பற்றி எழுதிய விமர்சனக் கட்டுரைகளையும் அவர் தொடர்ந்து படித்து வந்தார். இந் நிலையில், ஒருநாள் இந்தப் படத்தின் கதையை கூறினார். தொடர்ந்து கன்னியாகுமரியில் நாங்கள் சந்தித்து திரைக் கதையை உருவாக்கினோம். தமிழ் பகுதிக் கான வசனங்களை நான் எழுதினேன்.

**பொதுவாக லிஜோ ஜோஸ் பெல்லிசேரி படங்கள் தேர்ந்த திரைப்பட ரசிகர்களுக் கானதாக இருக்கும். இதனால், சாதாரண**



**பார்வையாளர்கள் புரிந்துகொள்ள சிரமப்படுவார்கள். இந்தப் படத்திலும் அது நிகழ்ந்துள்ளது. அவர்களுக்கு உதவுவது போல் விமர்சகர்கள் பலரும் இந்தப் படத்தின் கதை என்ன, எதை இந்தப் படம் பேசுகிறது என்று விளக்கி எழுதி யுள்ளார்கள். அதில் ஒன்று, படத்தின் தொடக்கத்தில் ‘உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு’ என்ற ஒரு திருக்குறள் இடம் பெறுகிறது. அந்தத் திருக்குறளுக்கான விளக்கவுரையே இந்தப் படம் என்பது. இதை சரி என்று எடுத்துக்கொள்ளலாமா?**

இதுதான் படமா என்றால் இல்லை. திரைக்கதை உருவாக்கத்தின் போது இந்தப் படத்தை ஒரு தமிழ் கவிதையை வைத்துத் தொடங்கலாம் என்று பேசினோம். அதற்காக இந்தத் திருக்குறள் மற்றும் சில சங்ககாலக் கவிதைகளைக் கொடுத்திருந்தேன். திருவள்ளுவர் ஒரு அறியப்பட்ட திருவுருவாக இருப்பதால் இந்தத் திருக்குறளை இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி தேர்வு செய்தார்.

**இன்னொரு பார்வை; காணாமல் போன சுந்தரம் இருக்கிறானா இல்லையா என்பது நிச்சயமற்று இருக்கிறது. இதனால் அவனது வீட்டார் அவனுக்கு இறுதிச் சடங்குகள் செய்யாமல் இருக்கிறார்கள். இந்நிலையில், இறந்துபோன சுந்தரம் தனக்கான படையலை, ஜேம்ஸ் ரூபத்தில் வந்து பெறுகிறான் என்பது. கடைசியில், சுந்தரமாக இருக்கும் ஜேம்ஸுக்கு மதிய உணவு படைக்கிறார்கள். சுந்தரத்தின் மனைவி சமைத்தது. அவனது மகள் ரசம் கொண்டுவந்து ஊற்றுகிறாள். வீட்டின் வெளியே ஒரு காகம் காத்திருக்கிறது. சுந்தரம் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான். சுந்தரத்தின் ஆன்மா நிறைகிறது. காகம் பறந்துசெல்கிறது. மறுபடியும் ஜேம்ஸ் சுயநினைவுக்கு வருகிறார். இதன்மூலம் சுந்தரத்தின் இறப்பை அவனது குடும் பத்துக்கு சொல்ல, ஜேம்ஸ் உடலுக்குள் சுந்தரம் புகும், மாய யதார்த்த சம்பவம் நிகழ்கிறது என கொள்ளலாமா?**

சுந்தரம் இறந்திருக்கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம். இதுபோல் பலவிதமான சாத்தியங்களை இந்தப் படத்தில் இயக்குநர் உருவாக்கியுள்ளார். பார்வையாளர்கள் எல்லா சாத்தியங்களை யும் பார்க்க முடியும் என்பதுதான் இந்தப் படத்தின் முக்கியத்துவம்.

**இன்னொன்று மலையாளிகள் ஆழ் மனதில் தமிழ் நிலமும் கலைகளும் இருக்கிறது. அதன் வெளிப்பாடாக, மலையாளியான ஜேம்ஸ் திடீரென தமிழனாக மாறுகிறார் என்கிறார்கள். நீங்கள் இதனை ஏற்றுக்கொள்வீர்களா?**

அப்படியும் பார்க்கலாம். ஒரு காலத்தில் தமிழ் பகுதிகளைப் போலவே கேரளா விலும் நாடகம் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசேரியின் அப்பா ‘சாரதி

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



# 95ஆவது வருட Oscar விருதுகள்



ஆரணி ஞானநாயகன்

Academy of Motion Picture Arts and Sciences நடத்தும் ஒஸ்கார் 'Oscars' விருது வழங்கும் விழா கடந்த March 12ஆம் திகதி நடைபெற்றது. 95ஆவது முறையாக நடக்கும் இவ்விழாவில் பல வரலாற்று நிகழ்வுகள் நடந்தன.

இவ்விழாவை இந்தியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந் தனர். SS. இராஜமௌலியின் 'RRR' திரைப்படத்திலிருந்து ஒரு பாடலும், தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட The Elephant Whisperers மற்றும் ஹிந்தியில் எடுக்கப்பட்ட All That Breathes என்ற படங்களும் இந்தியாவிலிருந்து Oscar விருதிற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் The Elephant Whisperers சிறந்த குறும்தகவல் படத்திற்கான விருதைப் பெற்று, Oscar விருதைப் பெற்ற முதல் இந்தியத் தயாரிப்பானது. 1983இல் Oscar விருதைப் பெற்ற 'காந்தி' படமும் 2009இல் Oscar விருதைப் பெற்ற Slumdog Millionaire படமும் பிரித்தானியாவால் தயாரிக்கப்பட்டவை. இதற்குப் பின்னர் இந்தியத் தயாரிப்பான



'RRR' படத்திலிருந்து 'நாட்டு நாட்டு' என்ற பாடல் சிறந்த முதல் தயாரிப்புப் பாடலுக் குரிய விருதைப் பெற்றது. இவ்விழாவில் பரிந்துரை செய்யப்பட்ட அனைத்துப் பாடல்களும் மேடையில் பாடப்படுவதால் இப்பாடலையும் தெலுங்குப் பாடகர்களு டன் அமெரிக்க நடனக்குழு மேடையில் ஆடிப் பாடினர். Oscar விருதுடன் Golden Globe விருது உட்பட பல அமெரிக்கத் திரைப்பட விருதுகளையும் 'RRR' பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நான்கு நடிப்பு விருதுகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட 20 நடிகர்களில், 16 பேர் முதல் முறையாக Oscar விருதுகளுக் காகப் பரிந்துரை செய்யப்பட்டனர். வெற்றி பெற்ற நால்வரும் இப்பிரிவைச் சேர்ந்தது




குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் நெடுங்காலமாக நடித்து வருபவர்களே, ஆனால் முதல்முறையாக Oscar விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தனர்.

